சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை (UDID) பயன்படுத்தி அனைத்துவகை மாற்றுத்திறனாளிகள் (Benchmark Disability) மற்றும் தனியாக செல்ல இயலாத மாற்றுத்திறனாளிகள் துணையாளர் ஒருவருடன் அரசு போக்குவரத்துக் கழகங்களின் மாநகர/நகர தாழ்தளப் பேருந்துகள், விரைவு பேருந்துகள் (Express), LSS, டீலக்ஸ் (Deluxe), புறநகர் (Mofussil) மற்றும் மலைப்பகுதிகளில் சாதாரண கட்டண பேருந்துகளில் (குளிர்சாதனப் பேருந்து நீங்கலாக) கட்டணமில்லா பயண திட்டத்தினை விரிவுபடுத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2.2)த் துறை

அரசாணை (நிலை) எண்.18

நாள்: 27.10.2026
பராபவ, ஐப்பசி –10,
திருவள்ளுவர் ஆண்டு, 2057,

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.01, மாற்றுத்திறனாளிகள் நல(மா.தி.ந–2)த் துறை, நாள் 03.06.2021.
2. அரசாணை (நிலை) எண்.18, மாற்றுத்திறனாளிகள் நல(மா.தி.ந.2.2)த் துறை, நாள்.16.09.2025.
3. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்களின் ந.க.எண்:13390003/மாதிந2.3/2026, நாள்:16.09.2026.

******

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2016–ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள 21 வகையான மாற்றுத்திறன்களில், 40 சதவீதம் மற்றும் அதற்கு மேல் மாற்றுத்திறன் பாதிப்பு தன்மை கொண்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது துணையாளர் (Escort) ஒருவருக்கு தமிழக அரசின் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் (White Board) கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்வதற்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2016–ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள 21 வகையான மாற்றுத்திறனாளிகளில், 40 சதவீதம் மற்றும் அதற்கு மேல் பாதிப்பு தன்மை கொண்ட (Benchmark Disability) மாற்றுத்திறனாளிகள், உதவியாளர் ஒருவருடன் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான சாதாரண கட்டணப் பேருந்துகளில் (White Board) அனுமதிக்கப்பட்ட கட்டணமில்லாமல் பயணிக்கும் விடியல் பயணத் திட்டத்தினை, தமிழ்நாட்டின் மலைப்பகுதிகளிலும் 2025–2026–ஆம் நிதியாண்டு முதல் விரிவுபடுத்திடவும், அதன்படி 40 சதவீதம் மற்றும் அதற்கு மேல் பாதிப்புத் தன்மை கொண்ட, (Benchmark Disability) மலைப்பகுதிகளில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகள், துணையாளர் (Escort) ஒருவருடன் 100% மலைப்பகுதிகள் (Fully Ghat) மற்றும் பகுதி மலைப்பகுதிகளில்

(Partially Ghat) இயக்கப்படும் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான சாதாரண கட்டணப் பேருந்துகளில் பேருந்து வசதி உள்ள பகுதிகளில் (Served Area) 35 கி.மீ. வரையிலும் மற்றும் பேருந்து வசதியில்லாத பகுதிகளில் (Unserved Area) 40 கி.மீ. வரையிலும் கட்டணமில்லா பயணம் செய்ய அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், 2026-2027-ஆம் நிதி ஆண்டிற்கான மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின்போது, 31.08.2026 அன்று சட்டமன்றப் பேரவையில் இன்னபிறவற்றுடன் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:-

> **"தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை (UDID) பயன்படுத்தி அனைத்துவகை மாற்றுத்திறனாளிகள் (Benchmark Disability) மற்றும் தனியாக செல்ல இயலாத மாற்றுத்திறனாளிகள் துணையாளர் ஒருவருடன் அரசு போக்குவரத்து கழகங்களின் மாநகர/நகர தாழ்தளப் பேருந்துகள், விரைவு பேருந்துகள் (Express), LSS, டீலக்ஸ் (Deluxe), புறநகர் (Mofussil) மற்றும் மலைப்பகுதிகளில் சாதாரண கட்டண பேருந்துகளில் (குளிர்சாதனப் பேருந்து நீங்கலாக) கட்டணமில்லா பயணம் மேற்கொள்ளும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்."**

4. மேற்குறிப்பிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் தனது செயற்குறிப்பில், தற்போது மாற்றுத்திறனாளிகள் கல்வி, தொழில் மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான பணி மற்றும் சுய தொழில் புரியவும், மறுவாழ்வு மற்றும் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளவும், தங்கள் இருப்பிடத்திலிருந்து 100 சதவீதம் கட்டணமில்லாப் பயணம் மேற்கொள்ள மாநகரப் போக்குவரத்துக் கழகம் உள்ளிட்ட அனைத்து அரசுப் பேருந்துகளிலும் செல்ல பேருந்து பயணச் சலுகை அட்டை வழங்கப்படுவதாகவும், மேலும் நகரப் பேருந்துகள் மட்டுமல்லாது இதர பேருந்துகளில் பார்வை மாற்றுத்திறனாளிகள் 100 கிலோமீட்டர் தூர எல்லைக்குள் எவ்வித நிபந்தனையுமின்றி கட்டணமில்லாமல் செல்லச் சலுகை வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

5. மேலும், மாற்றுத்திறனாளிகளுக்குத் தற்போது பல்வேறு வழிகளில் வழங்கப்பட்டு வரும் பேருந்து பயணச் சலுகைகளை ஒருங்கிணைத்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் மாநகர/நகர சாதாரண, விரைவுப் பேருந்துகள், தாழ்தளப் பேருந்துகள், LSS, டீலக்ஸ் (Deluxe) பேருந்துகளிலும் (குளிர்சாதனப் பேருந்து நீங்கலாக) மற்றும் புறநகர் (Mofussil) மற்றும் மலைப்பகுதிகளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சாதாரண கட்டண பேருந்துகளில் (குளிர்சாதனப் பேருந்து நீங்கலாக) 40 சதவீதம் மற்றும் அதற்கு மேல் மாற்றுத்திறன் கொண்ட அனைத்துவகை மாற்றுத்திறனாளிகளும் தங்களது தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டையைப் (UDID) பயன்படுத்தி கட்டணமில்லாப் பயணம் மேற்கொள்ளவும் மற்றும் தனியாக செல்ல இயலாத மாற்றுத்திறனாளிகள் துணையாளர் ஒருவருடன் செல்வதற்கும் சில நிபந்தனைகளை பின்பற்றி அனுமதி வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

6. மேலும், இத்திட்டத்திற்கென 2026-2027-ஆம் நிதியாண்டிற்கு ஏற்கனவே ரூ.95.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், இத்திட்ட விரிவாக்கத்திற்காகக் கூடுதலாக ரூ.19.00 கோடி சேர்த்து மொத்தம் ரூ.114.00 கோடியாக உரிய கணக்கு தலைப்பின் "2235-02-101-BG-34201" கீழ் நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

7. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் பேருந்து பயணச் சலுகைகளை ஒருங்கிணைத்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் மாநகர/நகர சாதாரண, விரைவுப் பேருந்துகள், தாழ்தளப் பேருந்துகள், LSS, டீலக்ஸ் (Deluxe) பேருந்துகளிலும் (குளிர்சாதனப் பேருந்து நீங்கலாக) மற்றும் புறநகர் (Mofussil) மற்றும் மலைப்பகுதிகளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சாதாரண கட்டண பேருந்துகளில் (குளிர்சாதனப் பேருந்து நீங்கலாக) 40 சதவீதம் மற்றும் அதற்கு மேல் மாற்றுத்திறன் கொண்ட அனைத்துவகை மாற்றுத்திறனாளிகளும் தங்களது தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டையைப் (UDID) பயன்படுத்தி கட்டணமில்லாப் பயணம் மேற்கொள்ளவும் மற்றும் தனியாக செல்ல இயலாத மாற்றுத்திறனாளிகள் துணையாளர் ஒருவருடன் செல்வதற்கும் அனுமதி வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும், இந்தப் பயணச் சலுகைக்காக ஏற்கனவே ரூ.95,00,00,000/-ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், இத்திட்ட விரிவாக்கத்திற்காக கூடுதலாக ரூ.19,00,00,000/- சேர்த்து மொத்தம் ரூ.114,00,00,000/- (ரூபாய் நூற்று பதினான்கு கோடி மட்டும்) கோரப்பட்டது. தற்போது இத்திட்டத்திற்கு ரூ.7,90,00,000/- (ரூபாய் ஏழு கோடியே தொண்ணூறு இலட்சம்) மட்டும் நிதியினை ஒதுக்கீடு செய்யலாம் எனவும், மேலும் இப்பயணச் சலுகையை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கவும் ஆணையிடுகிறது:

- மாற்றுத்திறனாளிகள் பேருந்தில் பயணம் மேற்கொள்ளும்போது 40 சதவீதம் மற்றும் அதற்கு மேல் மாற்றுத்திறன் கொண்ட மாற்றுத்திறனாளி என்பதற்கு ஆதாரமாகத் தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டையை (UDID) தவறாது எடுத்துச் சென்று நடத்துநரிடம் காண்பித்த பிறகே 100% கட்டணமில்லாப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர்.
- தற்போது வழங்கப்பட்டு வரும் மாற்றுத்திறனாளிகளுக்கான பேருந்து பயண சலுகைகள், 75 விழுக்காடு பயண சலுகை வழக்கம் போல் தொடரும்.
- மேலும் இப்பயணச் சலுகை தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் பதினாறு இலக்க எண் கொண்ட (மாதிரி -TNxxxxxxxxxxxxxxxx) 40% மற்றும் அதற்கு மேல் உள்ள தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டையைப் (UDID) பயன்படுத்தி மட்டுமே பயணம் மேற்கொள்ள இயலும்.
- இதற்கு முன் 2026-2027 ஆம் நிதியாண்டில் பெறப்பட்ட கட்டணமில்லா பேருந்து பயணச் சலுகை அட்டை, இத்திட்டம் நடைமுறையில் செயல்படுத்தும் போது செல்லுபடியாகாது.
- மாற்றுத்திறனாளிகள் மேற்குறிப்பிடப்பட்டவாறு பேருந்துகளில் மேற்கொள்ளும் பயணங்களை கணக்கீடு செய்யும்பொருட்டு அவர்கள் பயணம் மேற்கொள்ளும்போது அதற்கான இலவச பயணசீட்டினை பேருந்தின் நடத்துனர் வழங்க வேண்டும். இதன் மூலம் மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது துணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பயணங்கள் குறித்த உரிய கணக்கீடுகளை மேற்கொள்ள தகுந்த வழிமுறைகளை உருவாக்க போக்குவரத்து துறையை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- அரசாணை வெளியிடப்படும் தேதியிலிருந்து இந்த புதிய கட்டணச் சலுகை நடைமுறைப்படுத்தப்படும்.

8. மேலே பத்தி 7-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்:-

"2235 - சமூக பாதுகாப்பும் நலனும் - 02 - சமூக நலன் 101 - மாற்றுத்திறனாளிகள் நலன் - மாநில செலவினங்கள் - BG - மாற்றுத்திறனாளிகளுக்குப் பயணச் சலுகை - 342 - பணி அல்லது பொறுப்பேற்ற செலவுகள் - 01 - பணி அல்லது பொறுப்பேற்ற செலவுகள் "
(த.தொ.கு. 2235-02-101-BG-34201)

9. மேலே பத்தி 7-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப்பணி" (New Instrument of Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொ.1)த் துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்ட மன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963 இல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி(வ.செ.பொ.1)த் துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2026-2027 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொ-1/சந)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10. இவ்வரசாணை நிதித்துறையின் மின் கோப்பு எண்.1793/நிதி(சந)/2026 நாள் 27.10.2026-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. **கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.2026100759**

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.மதுமதி
அரசு செயலாளர்

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர், சென்னை- 05.
அனைத்து போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர்கள்,
(மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் வழியாக).
முதன்மை மாநில கணக்காயர், சென்னை -18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை -35.
உள்ளுரை தணிக்கை அலுவலர், சென்னை - 09.
போக்குவரத்து(பி1)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.